www.Padasalai.Net

# வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான கேள்விகள் மற்றும் பதில்கள்

1. வாக்குப்பதிவு நேரம் ?

   விடை : காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

2. மாதிரி வாக்குப்பதிவு துவங்குவதற்கு வேட்பாளர் முகவர்களுக்காக எவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டும் ?

   விடை : 15 நிமிடம்.

3. Voting Compartment-ல் எந்த கருவிகள் இருக்கும் ?

   விடை : VVPAT, BALLOT UNIT.

4. வாக்குப்பதிவின் போது VVPAT-ஐ பயன்படுத்துவதன் அவசியம் என்ன?

   விடை : யாருக்கு வாக்களித்தோம் என வாக்காளர் தெரிந்து கொள்வதற்கு

5. Control Unit-ஐ ஆன் செய்தவுடன் VVPAT-ல் எத்தனை Slips வரும்?

   விடை : 7 Slip

6. மாதிரி வாக்குப்பதிவு சுமார் எவ்வளவு மணி நேரத்திற்கு முன் துவங்க வேண்டும்?

   விடை : வாக்குப்பதிவு நேரத்திலிருந்து ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக.

7. மாதிரி வாக்குப்பதிவு துவங்கும் போது குறைந்த பட்சம் எத்தனை வேட்பாளர் முகவர்கள் இருக்க வேண்டும்?

   விடை : 2 (இரண்டு)

8. ஒரு வாக்குச்சாவடிக்கு எத்தனை Tendered Ballot Papers வழங்கப்படும்?

   விடை : 20 (இருபது)

9. ஒரு வாக்குச்சாவடிக்கு வேட்பாளர் ஒருவருக்கு எத்தனை முகவர்கள் இருக்கலாம்?

   விடை : 1 Polling Agent + 2 Relief Agents

10. வாக்குச்சாவடியில் ஒரு சமயத்தில் ஒரு வேட்பாளருக்கு எத்தனை முகவர்கள் வாக்குச்சாவடிக்குள் அனுமதிக்கலாம்?

    விடை : ஒருவர் மட்டுமே.

11. மாதிரி வாக்குப்பதிவின் போது குறைந்தபட்சம் எத்தனை ஓட்டுகள் போட வேண்டும்?

விடை : 50

12. வாக்குப்பதிவு முடிவதற்கு எத்தனை மணி நேரத்திற்கு முன் வேட்பாளர்களின் முகவர்களை வெளியே செல்ல அனுமதிக்கக் கூடாது?

விடை : மூன்று மணி நேரத்திற்கு முன்

13. வேட்பாளர் முகவர்களின் இருக்கை எங்கு அமைக்கப்பட்டிருக்கும்?

விடை : வாக்குச்சாவடி அலுவலர்களின் பின்புறம்.

14. மாதிரி வாக்குப்பதிவின் போது, அனைத்து வேட்பாளர்களுக்கும் முகவர்கள் இல்லையெனில் அவர்களுக்கு மாதிரி ஓட்டு போடுவதை தவிர்க்கலாமா?

விடை : இல்லை, சுழற்சி முறையில் அனைத்து வேட்பாளர்களுக்கும் மாதிரி ஓட்டுப் போட வேண்டும்.

15. மாதிரி வாக்குப்பதிவில் 50 ஓட்டுகள் போட்ட பிறகு, எந்த பட்டனை அழுத்தி மாதிரி வாக்குப்பதிவை முடிக்க வேண்டும்?

விடை : Control Unit-ல் உள்ள Close Button.

16. வாக்குப்பதிவிற்கு முந்தைய நாள் Presiding Officer செய்ய வேண்டிய முக்கிய பணிகள்?

விடை :

- Polling Materials சரியாக வந்துள்ளதா என உறுதி செய்ய வேண்டும்.
- Voting Compartment அமையப் போகும் இடத்தை தேர்வு செய்தல்.
- EVM, VVPAT, Green Paper Seal, Pink Paper Seal சீரியல் எண்கள் சரியாக உள்ளதா என உறுதி செய்தல்.
-

17. வாக்குச்சாடிவ மையத்திற்கு எத்தனை Electoral Roll Copy வழங்கப்படும்?

விடை : 3 (Marked Copy – 1 & Reference copy – 2)

18. வாக்குப்பதிவு கருவிகளை எவ்வாறு இணைக்க வேண்டும்?

விடை :

- BVC
- Ballot Unit 1 – VVPAT
- VVPAT – Control Unit

www.Padasalai.Net

- VVPAT – பின்புறம் உள்ள Knob-ஐ Vertical Position-ல் வைத்து அனைத்து கேபிள்களும் சரியா இணைக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்த பின்பே Control Unit-ஐ ஆன் செய்ய வேண்டும்.
-

19. Control Unit-ல் என்ன message வந்தவுடன் வாக்குப்பதிவை தொடங்கலாம்?

விடை :
- EVM IS READY
- OK
-

20. மாதிரி வாக்குப்பதிவு முடிந்தவுடன் Presiding Officer தயாரிக்க வேண்டிய Form எது?

விடை : Mock Poll Certificate

21. மாதிரி வாக்குப்பதிவு முடிந்தவுடன் எவ்வாறு மாதிரி வாக்குப்பதிவை சரிபார்க்க வேண்டும்?

விடை : Control Unit-ல் Result Button -ஐ அழுத்தி அதை VVPAT-ல் உள்ள Slipகளுடன் ஒப்பிட்டு சரிபார்க்க வேண்டும்.

22. மாதிரி வாக்குப்பதிவின் ஓட்டுகளை எவ்வாறு அழிக்க வேண்டும்?

விடை : Result Button மூலம் சரிபார்த்து விட்டு Control Unit-ல் உள்ள CLEAR BUTTON-ஐ அழுத்தி அழிக்க வேண்டும்.

23. வாக்குப்பதிவிற்கு Booth Slip-ஐ ஒரு அடையாள அட்டையாக கருதலாமா?

விடை : பூத் சிலிப்பினை அடையாள அட்டையாக கருதக்கூடாது.

24. VVPAT-ல் உள்ள Paper Roll-ல் எத்தனை Slip-கள் அதிகபட்சம் Print செய்யலாம்?

விடை : 1500 Slips

25. Marked Copy- ஐ பராமரிக்கும் அலுவலர் யார்?

விடை : Polling Officer – I

26. வாக்குச்சாவடியில் வாக்களிக்க வருபவர்களில் யாருக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்?

விடை :
- 1st Preference – Pregnant Ladies
- 2nd Preference – Senior Citizens, Infirm Voters
- 3rd Preference – Disabled persons

27. வாக்குப்பதிவு இயந்திரத்தில் மாதிரி வாக்குப்பதிவுகளை அழித்ததை எவ்வாறு உறுதி செய்து கொள்ள வேண்டும்?

விடை :
- Control Unit-ல் Total Button-ஐ அழுத்தும் பொழுது
- "Total Polled Votes : 0 (Zero) என இருப்பதன் மூலம் உறுதி செய்யலாம்.

28. மாதிரி வாக்குப்பதிவில் வந்த VVPAT Slip-களை என்ன செய்ய வேண்டும்?

விடை :
- மாதிரி வாக்குப்பதிவு முடிந்தவுடன், அனைத்து சிலிப்களின் பின்புறத்தில் "Mock Poll Slip" என ரப்பர் ஸ்டாம்ப் முத்திரையிட வேண்டும்.
- பின், அதை Black Envelope-ல் வைத்து சீல் செய்ய வேண்டும்.
- Label-ல் வேட்பாளர் முகவர்கள் மற்றும் PO Sign செய்ய வேண்டும்.
- Black Envelopன் இரு புறமும் Pink Paper Seal ஒட்ட வேண்டும்.
- Seal-ன் மீது Presiding Officer and வாக்குச்சாவடி முகவர்கள் கையொப்பம் இட வேண்டும்.

29. மாதிரி வாக்குப்பதிவிலுள்ள VVPAT Slip-களை Pack செய்யயும் போது எத்தனை முறை PO மற்றும் வேட்பாளரின் முகவர்கள் கையொப்பமிட வேண்டும்?

விடை : இரண்டு முறை (Black Envelope, Pink Paper Seal)

30. வாக்குச்சாவடி முகவர்கள் எங்கு வாக்காளராக இருக்க வேண்டும்?

விடை : முகவர்களாக நியமிக்கப்படும் வாக்குச்சாவடியின் பாகத்தில் தான் வாக்காளராக இருக்க வேண்டும்.

31. வாக்குச்சாவடி முகவர்களாக நியமிக்கப்பட்டவர்களை எவ்வாறு சரிபார்த்துக் கொள்வது?

விடை : படிவம் -10 நகலில் உள்ள கையெழுத்தும் முகவர்களாக வந்தவரின் கையெழுத்தும் ஒத்துப் போக வேண்டும்.

32. வாக்குச் சாவடியில் எந்த கருவியில் எவ்வித சீல் போட தேவையில்லை?

விடை : BALLOT UNIT

33. மாதிரி வாக்குப்பதிவு முடிந்த பின், எந்தெந்த கருவிகளில் சீல் செய்ய வேண்டும்?

விடை : VVPAT and CONTROL UNIT

34. வாக்குப்பதிவின் போது உணவு இடைவேளை உண்டா?

விடை : இல்லை

35. மாதிரி வாக்குப்பதிவு முடிந்தபின், VVPAT-ல் எந்த பகுதியை சீல் செய்ய வேண்டும்?

விடை : Ballot slip Compartment ஐ Address Tag ல் சீல் செய்ய வேண்டும்.

36. மாதிரி வாக்குப்பதிவு முடிந்த பின், Control Unit-ல் எத்தனை சீல்கள் செய்ய வேண்டும்?

விடை : 4 (FOUR)

37. வாக்குச்சாவடியில் வாக்காளரின் அடையாளத்தை உறுதி செய்யும் அலுவலர் யார்?

விடை : POLLING OFFICER - 1

38. மாதிரி வாக்குப்பதிவு முடிந்தவுடன் Control Unit-ல் செய்யப்படும் சீல்களை வரிசைப்படுத்தவும்?

விடை :

- Modified Green Paper Seal
- Result Section ல் Special Tag
- Address Tag- Control Unit -ன் இரு புறமும்.
- 

39. 17A Register-ஐ பராமரிக்கும் பொறுப்பு அலுவலர் யார்?

விடை : Polling Officer - 2

40. Polling Officer-1ன் பொறுப்பு என்ன?

விடை :

- வாக்காளரின் அடையாளத்தை அடையாள அட்டை மூலம் சரிபார்த்தல்.
- **வாக்காளரின் வரிசை எண்ணை உரத்த குரலில் சொல்லுதல்**.
- Tally Sheet -ல் Mark செய்தல்.
- Marked Copy-ல் ஆண் என்றால் Strike செய்தல், பெண் என்றால் வட்டமிடுதல்.

www.Padasalai.Net

41. Polling Officer-2 ன் பொறுப்பு என்ன?

விடை :
- வாக்காளரின் விபரத்தை 17A Register ல் பதிவு செய்து கையொப்பம் வாங்குதல்.
- Voter Slip வழங்குதல்.
- 

42. Control Unit-ன் பொறுப்பு அலுவலர் யார்?

விடை : Polling Officer – 3

43. வாக்குப்பதிவின் போது Presiding Officer அவ்வப்போது எதை சரிபார்க்க வேண்டும்?

விடை : Control Unit -ல் உள்ள Total Button ஐ அழுத்தி அதில் வரும் எண்ணிக்கையை 17A Register ல் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கையுடன் ஒப்பிட்டு சரிபார்க்க வேண்டும்.

44. வாக்காளர்களுக்கு அழியா மை வைக்கும் பொறுப்பு அலுவலர் யார்?

விடை : POLLING OFFICER – II

45. Polling Officer – III ன் பொறுப்பு என்ன?

விடை :
- வாக்காளரிடம் Voter Slip-ஐ பெறுதல்
- கையில் அழியா மை வைக்கப்பட்டுள்ளதா என உறுதிசெய்தல்
- Control Unit-ல் உள்ள Ballot Button -ஐ அழுத்துதல்
- Voter Slips-களை 50 ஆக கட்டி வைத்தல்.
- வாக்காளர் Voting Compartment லிருந்து வெளியே செல்லும் போது, Beep Sound வருவதை கவனித்தல் அல்லது Control Unit-ல் உள்ள Busy Lamp (சிவப்பு விளக்கு) அணைதல்.

46. Voter Slip – ஐ வாக்காளருக்கு வழங்கும் அலுவலர் யார்?

விடை : Polling Officer – II

47. Polling Officer-III Ballot Button – ஐ அழுத்தியதை எவ்வாறு உறுதி செய்து கொள்ளலாம்?

விடை : Ballot Button-ஐ அழுத்தியவுடன் Control Unit-ன் சிவப்பு விளக்கு எரியும்.

48. Control Unit-ல் உள்ள சிவப்பு விளக்கு பயன்பாடு என்ன?

விடை :
- வாக்காளர் தனது வாக்கை அளித்தவுடன் Control Unit-ல் உள்ள சிவப்பு விளக்கு அணைந்துவிடும்.
- Polling Officer- III அடுத்த வாக்காளர் தனது வாக்கை செலுத்த Ballot Button-ஐ அழுத்தினால் சிவப்பு விளக்கு எரியும்.
-

49. வாக்குச்சாவடியில் 1200 வாக்காளர்களுக்கு மேல் இருந்தால் எத்தனை Polling Officer பணியில் இருப்பர்?

விடை : நான்கு நபர்கள்

50. Polling Officer III எத்தனை Voter Slip சேர்ந்தவுடன் Bundle போட வேண்டும்?

விடை : 50 Voter Slip

51. வேட்பாளரின் முகவர்கள் எந்த வரிசையில் அமர வைக்க வேண்டும்?

விடை :
- வேட்பாளரின் வரிசை எண்கள் படி
- (அங்கீகரிக்கப்பட்ட தேசிய / மாநில கட்சிகள், பதிவு செய்த அங்கீகரிக்கப்படாத கட்சிகள், சுயேட்சைகள்)
-

52. வாக்குப்பதிவு ஆரம்பிக்கும் முன் Presiding Officer செய்ய வேண்டியது என்ன?

விடை : Presiding Officer Declaration-ஐ படிக்க வேண்டும்.

53. Mock Poll Certificate -ல் யார் கையொப்பமிட வேண்டும்?

விடை : Presiding Officer மற்றும் Polling Agents

54. Mock Poll Certificate-ல் Polling Agent எவரேனும் கையொப்பமிட மறுத்தால் என்ன செய்ய வேண்டும்?

விடை : Presiding Officer அந்த கலத்தில் "கையொப்பமிட மறுக்கிறார்" என குறித்து அவர் கையொப்பமிட வேண்டும்.

55. Presiding Officer declaration எப்போது படிக்க வேண்டும்?

விடை :
- வாக்குப்பதிவு துவங்குவதற்கு முன்
- வாக்குப்பதிவு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது EVM, VVPAT மாற்றப்பட்டால்.
- வாக்குப்பதிவு முடிவடைந்த உடன்

www.Padasalai.Net

- வாக்குப்பதிவு முடிவடைந்ததும், இயந்திரங்கள் முத்திரையிடப்பட்ட பின்னர்.

56. வாக்குப்பதிவு ஆரம்பிக்கும் முன் Ballot Unit, VVPAT and Control Unit-ல் பிரச்சனை ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?
விடை : பழுது ஏற்படும் கருவியை மட்டும் மாற்றினால் போதும்.

57. அசல் வாக்குப்பதிவு ஆரம்பித்த பின், VVPAT-ல் பிரச்சனை ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?
விடை : VVPAT-ஐ மட்டும் மாற்றினால் போதும்.

58. அசல் வாக்குப்பதிவு ஆரம்பித்த பின், Ballot Unit / Control Unit -ல் பிரச்சனை ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?
விடை : EVM, VVPAT என முழுவதுமாக மாற்ற வேண்டும்.

59. Presiding Officer Declaration கண்டிப்பாக எத்தனை முறை குறைந்தபட்சம் படிக்க வேண்டும்?
விடை : மூன்று முறை

60. வாக்குப்பதிவின் போது VVPAT -ல் பழுது ஏற்பட்டு VVPAT -ஐ மாற்ற நேரிட்டால் மீண்டும் மாதிரி வாக்குப்பதிவு நடத்த வேண்டுமா?
விடை : வேண்டாம்.

61. எந்த சமயத்தில், மாதிரி வாக்குப்பதிவு இரண்டாம் முறை செய்யப்படும்?
விடை : BU/CU பழுது ஏற்பட்டு, EVM மற்றும் VVPAT-ஐ மாற்ற நேரிடும் போது மீண்டும் வாக்குப்பதிவு செய்ய வேண்டும்.

62. Visit Sheet -ன் பொறுப்பு அதிகாரி யார்?
விடை : Presiding Officer

63. EVM, VVPAT மாற்றம் செய்யப்பட்டு இரண்டாம் முறை மாதிரி வாக்குப்பதிவு செய்யும் போது எத்தனை வாக்குகள் பதிவு செய்ய வேண்டும்?
விடை : ஒவ்வொரு வேட்பாளருக்கும் ஒரு வாக்கு பதியப்பட வேண்டும் (NOTA – வும் சேர்த்து)

64. ஒரு வாக்காளரின் வாக்கினை ஏற்கனவே வேறு ஒரு நபர் செலுத்திவிட்டதாக வாக்குப்பதிவு அலுவலரிடம் புகார் தெரிவித்தால் அலுவலர் என்ன செய்ய வேண்டும்?

விடை: ஆவணங்களை சரிபார்த்து Tendered Ballot Paper மூலம் வாக்களிக்க அனுமதிக்கலாம். (Rule 49P)

65. Tendered Ballot Paper மூலம் எவ்வாறு வாக்கு பதிய வேண்டும்?

விடை: Tendered Ballot Paper மூலம் - மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வாக்குப்பதிவு செய்ய முடியாது.

66. Tendered Ballot Paper மூலம் பதியப்படும் வாக்காளர் குறித்து எதில் பதிய வேண்டும்?

விடை: படிவம் – 17B ல் உரிய பதிவுகள் செய்து வாக்காளர் கையொப்பமிட வேண்டும்.

67. ஒரு வாக்காளர் 17A பதிவேட்டில் கையொப்பமிட்டு விட்டு அழியாத மை வைத்த பின்னர் வாக்களிக்க விருப்பமில்லை என்று வெளியில் சென்றால் வாக்குச்சாவடி அலுவலர் என்ன செய்ய வேண்டும்?

விடை: 17A பதிவேட்டில் குறிப்பு கலத்தில் 49 (O) ன் படி வாக்காளர் வாக்களிக்க மறுத்துவிட்டார் என எழுதி கையொப்பமிட வேண்டும்.

68. 49(M) என்றால் என்ன?

விடை: வாக்களிக்க வரும் வாக்காளர் ஒருவர் 17A பதிவேட்டில் கையொப்பமிட்டு வாக்களிக்க போகும் போது தான் இந்த சின்னத்திற்குதான் வாக்களிக்கிறேன் என்று எல்லோரும் அறிய வெளியில் தெரிவித்தால், அவரை 49M-ன்படி வாக்களிக்க அனுமதிக்கக் கூடாது – இதை 17A பதிவேட்டில் குறிப்பில் "வாக்களிக்க அனுமதிக்கவில்லை என" பதிந்து வாக்குச்சாவடி அலுவலர் கையொப்பமிட வேண்டும்.

69. வாக்குப்பதிவின் போது வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் முகவர்கள் செல்போன் மற்றும் கேமராக்கள் எடுத்துவர அனுமதிக்கலாமா?

விடை: அனுமதிக்கக் கூடாது/ வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மட்டும் அனுமதி உண்டு.

70. வாக்குப்பதிவின் போது கண்பார்வையற்ற / இயலாத வாக்காளர்கள் தங்களால் வாக்களிக்க முடியாது என உறுதி செய்யும் அலுவலர் யார்?

விடை: Presiding Officer

www.Padasalai.Net

71. வாக்குப்பதிவின் போது கண்பார்வையற்ற / இயலாத வாக்காளர்கள் வாக்களிக்க துணையாக வரும் நபரின் தகுதி என்ன?

விடை:
- 18 வயது பூர்த்தி அடைந்தவராக இருக்க வேண்டும்
- கட்சி சார்பற்ற தன்னார்வலர் / உறவினராக இருக்க வேண்டும்
- வேறு நபர் எவருக்கும் வாக்களிக்க துணையாக சென்றிருக்க கூடாது.
- 

72. வாக்குப்பதிவின் போது கண்பார்வையற்ற / இயலாத வாக்காளர்களுக்கு துணையாக வரும் நபருக்கு அழியா மை வைக்க வேண்டுமா?

விடை: ஆம், Right Hand Forefinger -ல் அழியா மை வைக்க வேண்டும்.

73. வாக்குப்பதிவின் போது கண்பார்வையற்ற / இயலாத வாக்காளர்களுக்கு துணையாக வரும் நபரிடம் உறுதிமொழி பெற வேண்டுமா? எதில் விபரத்தை பதிவு செய்ய வேண்டும்?

விடை: ஆம், படிவம் 14A

74. EDC யாருக்கு வழங்கப்படும்?

விடை: வாக்குப்பதிவு அலுவலர் ஒரு பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற தொகுதியில் வாக்கு வைத்திருந்து அதே பாராளுமன்ற தொகுதியில் பணிபுரிந்தால் EDC வழங்கப்படும்.

75. வாக்குச்சாவடிக்கு வரும் ஒருவரை இவர் சரியான வாக்காளர் இல்லை என எவர் மறுப்பு தெரிவிக்கலாம்?

விடை: வாக்குச்சாவடி முகவர்

76. வாக்குச்சாவடிக்கு வரும் ஒருவரை முகவர் இவர் சரியான வாக்காளர் இல்லையென மறுப்பு தெரிவிக்கும் போது தலைமை அலுவலர் என்ன செய்ய வேண்டும்?

விடை: ரூ. 2/- கட்டணம் முகவரிடம் வசூலித்துக் கொண்டு, சரியான நபர்தானா என்பதை விசாரித்து பிறகு சரியான நபராக இருந்தால் Challenged Vote போட அனுமதிக்கலாம்.

77. Challenged Vote போடும் நபரின் விபரங்களை எந்த படிவத்தில் பதிய வேண்டும்?

விடை: படிவம் 14 – வாக்காளர் கையொப்பம் பெற வேண்டும்.

78. Challenged Vote –ல் முகவர் Challenge செய்து விசாரணை செய்ததில் Challenge Prove செய்யப்பட்டால் தலைமை அலுவலர் என்ன செய்ய வேண்டும்?

விடை:
- அந்த நபரை Written Complaint மூலம் காவல்துறையிடம் ஒப்படைக்க வேண்டும்.
- ரூ. 2/- வசூலித்த கட்டணத்தை முகவரிடம் திருப்பி கொடுத்துவிட்டு ரசீதில் Endorsement செய்து கொள்ள வேண்டும்.
-

79. வாக்குச்சாவடி தலைமை அலுவலர் தன்னுடைய பணியினை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும் போது அவருடைய பணியை செய்வது யார்?

விடை: Polling Officer -1

80. ஒரு வாக்காளர் வாக்களிக்க வரும் பொழுது அவருக்கு 18 வயது நிரம்பவில்லை என்று வாக்களிக்க அனுமதிக்க கூடாது என முகவர் ஆட்சேபனை தெரிவித்தால் என்ன செய்ய வேண்டும்?

விடை:
- வாக்காளர் வயதிற்கான சான்றை சரிபார்க்க வேண்டும்.
- உறுதிமொழி பெற்றுக்கொண்டு வாக்களிக்க அனுமதிக்கலாம்

81. வாக்குப்பதிவு முடியும் நேரமான மாலை 6.00 மணிக்கு தலைமை அலுவலர் என்ன செய்ய வேண்டும்?

விடை:
- மாலை 6.00 மணிக்கு முன்னதாக வரிசையில் காத்திருக்கும் வாக்காளர்களுக்கு கடைசியில் நிற்பவரிலிருந்து முதல் டோக்கன் வழங்கப்பட வேண்டும்.
- டோக்கன் வைத்திருப்பவரை மட்டும் வாக்களிக்க அனுமதிக்க வேண்டும்

82. வாக்குச்சாவடிக்கு வரும் வாக்காளர் ஒருவர் Epic Card வைத்திருந்து அவரது பெயர் வாக்காளர் பட்டியலில் இல்லையெனில் அவரை வாக்களிக்க அனுமதிக்கலாமா?

விடை: இல்லை, அனுமதிக்கக்கூடாது.

83. வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும் ASD பட்டியலில் ஒரு வாக்காளர் பெயர் இடம் பெற்றிருந்து அவர் வாக்களிக்க வரும் போது அவரை அனுமதிக்கலாமா?

விடை: வாக்காளர் குறித்து விவரங்களை கேட்டு திருப்தி அடையும் பட்சத்தில் வாக்களிக்க அனுமதிக்கலாம்.

www.Padasalai.Net

84. வாக்குப்பதிவில் அனைத்து வாக்காளர்களும் வாக்களித்த பின், வாக்குப்பதிவை எவ்வாறு முடிக்க வேண்டும்?

விடை: Control Unit-ல் உள்ள Close பட்டனை அழுத்த வேண்டும்.

85. வாக்குப்பதிவு முடிந்த பிறகு தலைமை அலுவலரின் பணிகள்?

விடை:
- Presising Officer declaration பூர்த்தி செய்திட வேண்டும்
- 17 A Register – Red line போட்டு "Total Serial No in 17 A Register ... குறித்து" Actual Time of Closure of Poll குறித்து PRO மற்றும் Polling Agents கையொப்பமிட வேண்டும்.
- EVM, VVPAT கருவிகளை Carrying Case-ல் வைத்து சீல் செய்ய வேண்டும் (Address Tags)

86. வாக்குச்சாவடி தலைமை அலுவலர் அவருடைய டைரியை எப்போது எழுத வேண்டும்?

விடை: மாதிரி வாக்குப்பதிவு தொடங்கியதிலிருந்து அவ்வப்போது நடைபெறும் நிகழ்வுகளை தவறாமல் பதிவு செய்ய வேண்டும்

87. வாக்குப்பதிவு முடியும் நேரத்தை எதில் குறிப்பிட வேண்டும்?

விடை:
- 17C form
- 17A பதிவேடு
- PRO Declaration
- PRO Diary
- சீலிடப்படும் Address Tag களில்

88. வாக்குப்பதிவின் போது கட்சி முக்கிய பிரமுகர்களை வாக்குச்சாவடிக்குள் அனுமதிக்கலாமா?

விடை:அந்த வாக்குச்சாவடியில் வாக்காளராக இருக்கும் பட்சத்தில் வாக்களிக்க மட்டும் அனுமதிக்கலாம். இல்லையென்றால் அனுமதிக்கக்கூடாது.

89. கட்சி சார்பில் யார் வாக்குச்சாவடிக்குள் செல்ல அனுமதிக்கலாம்?

விடை: வேட்பாளர, Election Agents, Polling Agent

90. முக்கிய பிரமுகர் வாக்களிக்கும் போது Voting Compartment –க்குள் பத்திரிக்கையாளர்களை அனுமதிக்கலாமா?

விடை: அனுமதிக்கக்கூடாது

91. வாக்குச்சாவடிக்குள் காவல் அலுவலர்கள் நுழைய அனுமதிக்கலாமா?

விடை: தலைமை அலுவலர் அழைக்காத பட்சத்தில் உள்ளே வர அனுமதியில்லை

92. வாக்குப்பதிவு நடந்து கொண்டிருக்கும் பொழுது எவரேனும் கூட்டமாக வந்து வாக்குப்பதிவு கருவிகளை கைப்பற்ற முயற்சிக்கும் போது தலைமை அலுவலர் என்ன செய்ய வேண்டும்?

விடை: Control Unit-ன் Close Button- ஐ அழுத்தி விட்டு மண்டல் அலுவலருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

93. **வாக்குப்பதிவு முடியும் நேரத்தில் கடைசியாக வரும் ஒரு வாக்காளர்** 17A பதிவேட்டில் கையொப்பமிட்டு Polling Officer – III Ballot Button- ஐ அழுத்திய பின்பு வாக்களிக்க மறுத்துவிட்டால், எவ்வாறு வாக்குப்பதிவை முடிக்க வேண்டும்?

விடை: Control Unit-ஐ ஆப் செய்து பின்னர் Control Unit – ஐ ஆன் செய்து அதன் பின் Close Buttion – ஐ அழுத்த வேண்டும்.

94. Rule 49MA என்றால் என்ன?

விடை: வாக்காளர் வாக்களித்த பின் VVPAT-ல் தோன்றும் சின்னம் தவறு என தெரிவித்தால், பிரிவு 49 M ன் கீழ் விசாரணை செய்ய வேண்டும்.

(a) தலைமை அலுவலர் –Consequences ஐ தெளிவாக சொல்ல வேண்டும்

(b) வாக்காளர் உறுதியாக இருந்தால் Declaration பெற வேண்டும்

(c) முகவர், வாக்காளர் முன்னிலையில் Test Vote போட வேண்டும்

(d) Test Vote சரி எனில், காவல் துறையிடம் அந்த நபரை ஒப்படைக்க வேண்டும். தவறு எனில் VVPAT-ஐ மண்டல அலுவலர் மூலம் மாற்றம் செய்து மீண்டும் வாக்களிக்க அனுமதிக்க வேண்டும்.

95. ASD பட்டியலில் இருக்கும் நபரை ஆய்வு செய்தபின் வாக்களிக்க அனுமதிக்கும் பட்சத்தில் கூடுதலாக செய்ய வேண்டிய பணி என்ன?

விடை: 17A பதிவேட்டில் வாக்காளரின் கையொப்பத்துடன் இடது கை பெருவிரல் ரேகையும் பெறப்பட்டு குறிப்பு கலத்தில் ASD என குறிக்க வேண்டும், அதற்கான Annexure – 16 ல் பதிவுகள் மேற்கொள்ள வேண்டும்.

96. Control Unit Screen -ல் LE (Link Error) என்று வந்தால் என்ன அர்த்தம்?

விடை: Ballot Unit -> VVPAT -> Control Unit உடன் உள்ள இணைப்புகள் சரியாக இல்லை என அர்த்தம்.

97. வாக்குப்பதிவு மையத்திலிருந்து வேட்பாளர் முகவர் எவ்வளவு மீட்டர் அப்பால் தனது அலுவலகத்தை அனுமதிக்கலாம்?

விடை: 200 மீட்டர்

98. வாக்குச்சாவடி முகவர்கள் எத்தனை மணிக்குள் வாக்குச்சாவடிக்கு வந்தடைய வேண்டும்?

விடை: காலவரைமுறை இல்லை. எப்போது வந்தாலும் வேட்காளருக்கு 1 நபர் என அனுதிக்கலாம். வாக்குப்பதிவு முடிவதற்கு மூன்று மணி நேரத்திற்கு முன் அனுமதிக்கக்கூடாது.

99. EDC மூலம் வாக்குப்பதிவு செய்யும் அலுவலர்கள் விபரத்தை எவற்றில் குறிக்க வேண்டும்?

விடை: Marked Copy இறுதியில் , 17A பதிவேடு

100. EDC கொண்டுள்ள வாக்குச்சாவடி அலுவலர்கள் எங்கு தனது வாக்குகளை பதிவு செய்யலாம்?

விடை: தான் பணிபுரியும் அதே வாக்குச்சாவடியில்

101. EDC மூலம் வாக்களிக்கும் அலுவலர் விபரத்தை 17A பதிவேட்டில் எவ்வாறு பதிவு செய்ய வேண்டும்?

விடை: வாக்காளர் பட்டியல் வரிசை எண்/பாகம் எண், பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு குறிப்பு காலத்தில் EDC Voter என எழுத வேண்டும்

102. Indelible Ink ஒரு குப்பி எத்தனை வாக்காளர்கள் வீதம் வழங்கப்படும்?

விடை: 700 வாக்காளர்களுக்கு ஒரு குப்பி

103. வாக்குச்சாவடி முகவர்கள் கட்சி கொடி தெரியும் அடையாள அட்டை, வேஷ்டி, துண்டு அணிந்து வர அனுமதிக்கலாமா?

விடை: அனுமதிக்கக்கூடாது.

www.Padasalai.Net

104. Tendered Voters இயந்திரம் மூலம் வாக்களிக்க அனுமதிக்கலாமா?

விடை: இல்லை, ஆய்வுக்குரிய வாக்குச் சீட்டு மூலம் வாக்களிக்க வேண்டும்.

105. வாக்குச்சாவடி முகவர்கள் மாறும்பட்சத்தில் வாக்காளர் பட்டியலை என்ன செய்ய வேண்டும்?

விடை: மாற்று முகவரிடம் கொடுத்து செல்ல வேண்டும் / கண்டிப்பாக வெளியில் எடுத்து செல்ல அனுமதிக்க கூடாது.

106. வாக்குப்பதிவிற்கு முந்தைய நாள் VVPAT -ஐ பயன்படுத்தலாமா?

விடை: கண்டிப்பாக பயன்படுத்தக்கூடாது

107. VVPAT -ஐ இயக்கும்போது பின்புறம் உள்ள Knob எந்த Position -ல் இருக்க வேண்டும்?

விடை: Vertical Position - Working Condition

108. வெளிநாடு வாழ் இந்தியர் வாக்களிக்க எத்தகைய ஆவணம் கொண்டுவர வேண்டும்?

விடை: Original Passprot

109. Voting Compartment-ல் கேமரா அல்லது செல்போன் உபயோகப்படுத்தலாமா?

விடை: உபயோகிக்கக்கூடாது / வாக்காளர் மொபைல் போனை வாக்குச்சாவடிக்குள் கொண்டு செல்ல அனுமதிக்கக்கூடாது.

110. Zonal Officer-யிடம் கொடுக்கப்பட வேண்டிய முக்கிய ஆவணங்கள்?

விடை: வகைப்படுத்தப்பட்டுள்ள ஆறு உறைகள்

111. 17C படிவத்தில் EDC வாக்குகள் இருப்பின் வாக்குச்சாவடியின் மொத்த வாக்குக்களை எவ்வாறு குறிப்பிட வேண்டும்?

விடை: $1^{st}$ : கலத்தில் No.of Voters + EDC Voters = Total Voters

Eg: 1157 + 4 (EDC) = 1161

112. EDC எந்த படிவத்தில் வழங்கப்பட்டிருக்கும்?

விடை: படிவம் 12B

113. EDC வாங்கி வைக்கும் பொறுப்பு அலுவலர் யார்?

விடை: Polling Officer-1

114. 17A பதிவேட்டில் குறிப்புக் கலத்தில் எவற்றையெல்லாம் குறிக்க வேண்டும்?

விடை: 49(O), 49(M), EDC, ASD List Voters, Test Vote.

115. வாக்களிக்கும் போது VVPAT-ல் உள்ள Slip Cut ஆகாமல் hanging Position-ல் இருந்தால் என்ன செய்ய வேண்டும்?

விடை: VVPAT இயந்திரத்தை மட்டும் மாற்ற வேண்டும்

Presiding Officer Diary-ல் குறித்துக் கொள்ள வேண்டும்.

VVPAT மாற்றப்படும் போது அந்த வாக்காளருக்கு மீண்டும் வாக்களிக்க வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

116. தலைமை அலுவலர் எந்த தருணங்களில் Voting Compartment-க்குள் செல்லலாம்?

விடை: வாக்கு இயந்திரங்கள் பழுது ஏற்பட்டால் வாக்காளர் எவரேனும்

இயந்திரங்களை கைப்பற்றவோ / tamper செய்யவோ முற்படும் போது.

117. வாக்குப்பதிவு முடிவுற்ற பின் 17A பதிவேட்டில் மேற்கொள்ள வேண்டிய பணி என்ன?

விடை: Red Line கோடிட்டு "Total Sl.No. in 17 A Register is ......"

Time and Closure of Poll எழுத வேண்டும்.

அதற்கு கீழ் Presiding Officer, Polling Agent கையொப்பமிட வேண்டும்.

118. வாக்காளர் அடையாள அட்டையை தவிர்த்து வேறு எந்த ஆவணங்களை அடையாள ஆவணமாக கருதலாம்?

விடை: 12 ஆவணங்கள்

1. Aadhar Card (AC)
2. MNREGA Job Card (MNREGA)
3. Passbooks with photograph issued by Bank / post office) (PB)
4. Health Insurance Smart Card issued under the scheme of Ministry of Labour (H.I.S)
5. Driving License (DL)
6. PAN Card (PC)
7. Smart Card issued by RGI under NPR (SC)
8. Indian Passport (PPt)
9. Pension Document with photograph (PD)
10. Service Identity Cards with photograph issued to employees by Central/ State Govt.PSUs/Public Limited Copmanies: and (SID)

www.Padasalai.Net

11. Official identity cards issued to MPs/MLAs/MLCs. (OID)
12. Unique Disability ID(UDID) card, M/o Socia: Justice & Empowerment, Government of India (UDID)ID Card (OID)

**119.** Tendered Voters Voting Compartment-ல் எதை வைத்து Ballot Paper-ல் வாக்களிக்க வேண்டும்?

விடை: Arrow Cross Mark Seal வைத்து அதை உறையில் வைத்து ஒட்ட வேண்டும் . Presiding Officer - யிடம் ஒப்படைக்க வேண்டும்.

**120.** 17C படிவத்தில் 7 வது கலத்தில் எவ்வாறு கணக்கு செய்து குறிக்க வேண்டும்?

விடை: 17 A, Total No.49 (M) details & 49 (O) details